2020 செப்டம்பர் 16] [திரு. கே.பி. அன்பழகன்]

ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் உயர் கல்வித் துறையில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, 2018–2019 ஆம் ஆண்டிலே நம்முடைய தமிழகமானது 49 சதவிகிதத்தை GER–ல் எட்டியிருக்கிறது. இந்தாண்டு கணக்கிட்டோம் என்றால், அவர்கள் குறிப்பிட்ட அந்த 50 சதவிகிதத்தையும் தாண்டுகிற அளவிற்கு மாணாக்கர்கள் சேர்க்கை நடைபெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். மாணவர்களுக்கு ஆசிரியர் ratio இந்திய அளவிலே 26 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற வீதம் இருந்தாலும்கூட, தமிழகத்திலே 17 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு, கடந்த கூட்டத் தொடரின்போது கடிதம் அனுப்பப்பட்டது.

இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு ஆலோசனைகளை இங்கே வழங்கியிருக்கிறார்கள். உயர் கல்வித் துறையின்கீழ் அவர்கள் சொன்ன கருத்துகளையெல்லாம் எடுத்துக்கொண்டு அதனை பரிசீலனை செய்து, 7 பேர் கொண்ட குழுவின் கவனத்திற்கு அதை எடுத்துச் சென்று, அதிலே இருக்கக்கூடிய சாதக, பாதகங்களையெல்லாம் மாநில அரசினுடைய உரிமைகள் பறிக்கப்படாதவண்ணம் ஆய்வு செய்து, மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

6. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) மருத்துவக் கல்வி இடங்களில் 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க குழு அமைத்து அதற்குத் தமிழக பிரதிநிதியை பரிந்துரைக்க வேண்டியமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மருத்துவக் கல்வி இடங்களில் 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிட Committee அமைத்து அதற்குத் தமிழக பிரதிநிதியை பரிதுரைக்க வேண்டியது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, திரு. கு. பிச்சாண்டி, திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

[2020 செப்டம்பர் 16

பிற்பகல் 12–45

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியினுடைய வரலாற்றில் மூன்று நூற்றாண்டுகளாகத் தடம் பதித்த பெருமை தமிழ்நாட்டிற்கு இருக்கிறது. நீதிக் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவராக இருந்த சர். பிட்டி. தியாகராயருடைய Magna Carta–வில் துவங்கி, திரு. முத்தையா முதலியார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் என தொடர்ந்து நம்முடைய திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களின் பங்களிப்பு இருந்திருக்கின்றது.

தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை உறுதி செய்யக்கூடிய அளவிற்கு ஒரு மாபெரும் சமூக நீதிப் புரட்சிக்கு நிலைக்களமாக தமிழ்நாடு எப்போதும் விளங்கி வந்திருக்கிறது. ஆனால், மத்திய அரசு நம்முடைய உணர்வுகளை எப்போதும் புரிந்துகொண்ட ஓர் அரசாக இருந்ததில்லை. உதாரணமாக மருத்துவக் கல்வி உள்ளிட்ட உயர் படிப்புகளிலே மத்திய தொகுப்புக்கு வழங்கக்கூடிய அந்த எண்ணிக்கையில், இளங்கலை படிப்புகளில் 15 சதவிகிதம், உயர்நிலை படிப்புகளில் 50 சதவிகிதமாக வழங்கக்கூடிய இட ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசாங்கம் மறுத்தே வந்திருக்கிறது. மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய நிறுவனங்களிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு இட ஒதுக்கீட்டை, வழங்கக்கூடியவர்கள், மத்திய தொகுப்பிற்கு, நம்முடைய resources–லிருந்து நாம் கொடுக்கக்கூடிய இடங்களுக்கு அந்த இட ஒதுக்கீட்டை வழங்குவதை முடியாது என்று மறுத்து வந்தார்கள்.

நான்கு ஆண்டுக் காலமாக நமக்கு இந்த அநீதி இழைக்கப்பட்டு வந்த இந்தக் காலக்கட்டத்தில்தான் எங்கள் கழகத்தினுடைய தலைவர், எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய அருமை அண்ணன் தளபதி அவர்களுடைய சீரிய முயற்சியால், எங்களுடைய உறுப்பினர் திரு. வில்சன் அவர்களுடைய குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்து, இந்த முக்கியமான பிரச்சினையை எதிரொலிக்கச் செய்தது மட்டுமல்லாமல், இட ஒதுக்கீட்டினை இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும் வழங்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகளைத் தொடுக்கச் செய்தார். இட ஒதுக்கீட்டை மாநில அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்கிற மிக முக்கியமான,

2020 செப்டம்பர் 16] [திரு. தங்கம் தென்னரசு]

வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுத் தந்த பெருமை எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் எங்கள் தளபதி அவர்களுக்கு உண்டு என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் குழு ஒன்றை அமைக்க வேண்டும். மாநில அரசாங்கத்தினுடைய இட ஒதுக்கீடாக இருக்கக்கூடிய 69 சதவிகிதத்தை அந்தக் குழு மனதிலே கொண்டு, இதற்கான வழிமுறைகளைக் காண வேண்டுமென்று உயர் நீதிமன்றம் ஒரு நல்ல தீர்ப்பினை அன்றைக்கு வழங்கியிருக்கிறது. எங்கள் கழகத் தலைவரான மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனடியாக இந்தக் குழுவினை அமைக்க வேண்டுமென்றும், அந்தக் குழுவை உடனடியாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்றும், எங்களுக்கு இருக்கக்கூடிய 50 சதவிகித இட ஒதுக்கீட்டு உரிமையை வழங்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள். அதன் அடிப்படையிலே அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நான் இன்றைக்குக் கேட்க விரும்புவது என்னவெனில், அந்தக் குழுவினுடைய சார்பில், தமிழ்நாட்டின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் துறையின் செயலாளராக இல்லாமல், வேறொரு அதிகாரியை நீங்கள் நியமித்திருக்கிறீர்கள். எனவே, தமிழகத்தின் சார்பில், துறையினுடைய செயலாளர் ஒருவரை நம்முடைய பிரதிநிதியாக அரசு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மிக முக்கியமான கருத்து. நீங்கள் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு கேட்கிறீர்கள். ஏற்கெனவே துறையின் செயலாளராக இருந்தவர், மீண்டும் இப்போது செயலாளராக இருக்கிறார். அவர் கடந்த ஆண்டிலே ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் 27 சதவிகிதம்தான் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்குப் பின் வந்த துறைச் செயலாளரும் கடந்த ஜனவரி மாதம் 27 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைதான் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறார். நான் இப்போது கேட்டுக்கொள்வதெல்லாம் 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பது, நாம் தமிழகத்தில் போராடி பெற்றிருக்கக்கூடிய அரசியல் சாசன உரிமை. எனவே, நீங்கள் 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைப் பெற்றுத்தரக்கூடிய வகையிலே, அதை நிலை நிறுத்த வேண்டுமென்று நான் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. தங்கம் தென்னரசு] [2020 செப்டம்பர் 16

நேற்றையதினம்கூட உயர் கல்விப் படிப்புகளில் 7.5 சதவிகிதம் உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு வழியில்லை என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர் ஒரு நல்ல விளக்கத்தை இங்கே தந்தார்கள். நான் இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், உயர் கல்விப் படிப்புகளில் 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு என்று நேற்று நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது +2 எழுதும் மாணவர்களிலே 41 சதவிகிதம் அரசுப் பள்ளி மாணவர்களும் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நீதியரசர் கலையரசன் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு அரசிற்குக் கொடுத்திருக்கக்கூடிய Committee Report–லே 10 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆனால், எந்த அடிப்படையிலே 7.5 சதவிகிதம் என்று அரசு நிர்ணயித்தது என்ற விளக்கத்தை தெரிந்துகொள்ள நான் மீண்டும் வலியுறுத்தி இங்கே கேட்டுக்கொள்கிறேன். எந்தக் கட்டத்திலும், எந்த சூழ்நிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 50 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறக்கூடிய வகையில் எல்லா விதமான முயற்சிகளையும் அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவப் படிப்புகளிலே, மருத்துவ மேற்படிப்புகளிலே, Super Speciality Courses–க்கு 100 சதவிகிதம் கொடுத்திருக்கிறது. நம்முடைய State resources; அதாவது, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய resources. எனவே, அதில் வரக்கூடிய இட ஒதுக்கீட்டில், 50 சதவிகிதத்தை நிலை நிறுத்தக்கூடிய வகையில், வலிமையான கருத்துகளை நீங்கள் எடுத்து வைக்கவேண்டுமென்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்காக, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தவர் என்பது உங்களுக்கும் தெரியும், மாமன்றத்திற்கும் தெரியும். நீங்கள்

பேசுகின்றபோது, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்த வழக்கில் வெற்றி பெற்று, வாங்கிக் கொடுத்தது மாதிரி சொல்கிறீர்கள், அது அப்படி இல்லை, அதை மறுக்கின்றேன். நீங்களும் வழக்கில் இணைந்தீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதாவது, (குறுக்கீடு) நீங்கள் பேசுகின்றபொழுது, resource என்று சொன்னீர்கள். இந்த resource-ஐ உருவாக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. ஏனென்று சொன்னால், இந்தியாவிலேயே அதிகமான எண்ணிக்கையில் M.B.B.S. இடங்களை உருவாக்கிக் காட்டியிருப்பது புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு என்பதை நேற்றுகூட நான் அவையில் குறிப்பிட்டேன். சுதந்திரம் வாங்கிய 64 ஆண்டு கால வரலாற்றில், 2011 வரைக்கும் 1,945 seats என்றால், இப்பொழுது 3,050 seats. கிட்டத்தட்ட 150 சதவிகிதம் அதிகமாக வாங்கியிருக்கிறோம். அதேபோல, M.D., M.S. போன்ற P.G. seats-ல் 1,922 seats; கிட்டத்தட்ட 2000 seats-ஐ இன்றைக்கு உருவாக்கிக் கொடுத்திருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. இவ்வளவு seats-ஐ நாம் உருவாக்கியிருக்கும்போது நீங்கள் சொன்ன அதே உணர்வு எல்லோருக்கும் இருக்கிறது. M.B.B.S. seat-ஐயும், P.G. seat-ஐயும் நாம் இவ்வளவு increase செய்யும்பொழுது, U.G. seats-ல் 15 சதவிகிதத்தை Government of India quota-க்கு நாம் கொடுக்கும்பொழுது, அதிலே இட ஒதுக்கீட்டை நிலைநிறுத்த வேண்டும் என்பதில் தொடர்ந்து அரசு உறுதியாக இருக்கிறது. அதிலே எந்த மாற்றமும் இல்லை.

பலமுறை மத்திய அரசிடம், மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தியிருக்கிறோம், கடிதம் எழுதியிருக்கிறோம். அதிலே நாம் உறுதியாக இருந்திருக்கிறோம். மூத்த உறுப்பினர் நீங்கள் சொல்வதுபோல வழக்கை நாம் சந்தித்தோம். இதிலே வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றிருக்கிறோம். இரண்டு வெற்றியைப் பெற்றிருக்கிறோம். ஒன்று, உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் இந்த P.G.-க்கு அதாவது, 50% service quota-ல் அதை நாம் உறுதிப்படுத்தியிருக்கிறோம். அது ஒரு மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி. அரசுக்குக் கிடைத்த வெற்றி, அதில் எந்தவித மாற்றமும் இல்லை. அதேபோல, All India quota-ல் இட ஒதுக்கீட்டை நிலை நிறுத்துவதற்காகத் தொடுத்த இந்த வழக்கிலும், நாம் உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை இன்றைக்கு உறுதிப்படுத்தியிருக்கிறோம். இதுவும், மிகப்பெரிய வெற்றி. அதிலே

எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. நாம் இணைந்து, அந்த வெற்றியை இன்றைக்குப் பெற்றிருக்கிறோம். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில், Government of India ஒரு committee அமைக்க வேண்டுமென்றும், அதற்கு நீங்கள் nominee கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். சுகாதாரத் துறையில் மூத்த அனுபவம் கொண்ட, துறையில் பல ஆண்டுக்காலம் பணியாற்றிய மரியாதைக்குரிய திரு. உமாநாத், இ.ஆ.ப. அவர்களை nominee ஆக நியமித்திருக்கிறோம். மற்றபடி, எப்பொழுதெல்லாம் கூட்டம் கூட்டப்படுகிறதோ, அந்தக் கூட்டத்தில் அரசுச் செயலாளர்கள் கண்டிப்பாக இருப்பார்கள் என்பதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. அந்த வழக்கிலே, நாம் வாதாடி, போராடி, சட்டப் போராட்டம் நடத்தி, உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் எப்படி இதை நிலைநிறுத்தினோமோ அதேபோல, இந்த Committee-லும் ஆணித்தரமான வாதங்களை, அரசு தரப்பு நியாயங்களை, நீங்கள் சொன்ன அந்த உணர்வுகளோடு சேர்த்து, எடுத்து வைத்து, நீங்கள் சொன்ன இந்த 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை அரசு நிச்சயமாகப் பெற்று, நம்முடைய தமிழ் மாணவர்களுக்கு, நம்முடைய மண்ணைச் சார்ந்த மாணவர்களுக்கு, மருத்துவத்தில் M.D., M.S., M.Ch. போன்ற Super Speciality மருத்துவ இடங்களைப் பெற்றுத் தருவதற்கு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், திருமழப்பாடியில் துணை சுகாதார நிலையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அரசுக் கொறடா, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், திருமழப்பாடி ஊராட்சியில்